**செ.வெ.எண்.375** **நாள் : 03.08.2017**

**காஞ்சிபுரம் மாவட்டம் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் நடத்தும் தொகுதி IIA (Non Interview posts – II) தேர்விற்கான முன்னேற்பாடு பணிகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.பா.பென்னையா இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் நடத்தும் தொகுதி IIA (Non Interview posts – II) க்கான தேர்வுகள் தமிழகம் முழுவதும் 06.08.2017 அன்று நடைபெறுகிறது. இத்தேர்வுகளுக்கான முன்னேற்பாடு பணிகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூட்டரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பேசிய மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப. அவர்கள்,

காஞ்சிபுரம் மாவட்டத்தில் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் தொகுதி IIA (Non Interview posts – II) க்கான தேர்வுகள் 06.08.2017 அன்று 54 தேர்வு மையங்களில் 103 தேர்வு அறைகளில் தேர்வு நடைபெறுகிறது. இத்தேர்வினை கண்காணிப்பதற்கு 18 சுற்றுக் குழுக்களும், 10 பறக்கும் படைகளும் அமர்த்தப்பட்டுள்ளன. மாவட்டம் முழுவதிலும் 32 ஆயிரத்து 349 தேர்வாளர்கள் இத்தேர்வினை எழுதுகின்றனர்.

பறக்கும் படையைப் பொறுத்தவரை அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள தேர்வுக் கூடங்களை தணிக்கை செய்து, தேர்வு எழுதுபவர்களை பார்த்து எழுதாமலும், பிட் அடிக்காமலும் கண்காணிக்க வேண்டும் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ள வேண்டும்.

சுற்றுக்குழு காஞ்சிபுரம் மாவட்ட கருவூலம், செங்கல்பட்டு மற்றும் தாம்பரம் சார் கருவூலம் ஆகியவற்றில் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட தேர்வு கூடங்களுக்கு வினா மற்றும் விடைத்தாள்களை காவல் பாதுகாப்புடன் தேர்வு கூடங்களில் உள்ள முதன்மை கண்காணிப்பாளரிடம் ஒப்படைக்க வேண்டும். தேர்வு முடிவுற்றவுடன் மீதமுள்ள விடைத்தாள் (OMR sheets) மற்றும் தேர்வு எழுதியவர்களின் விடைத்தாள்களை காவல் பாதுகாப்புடன் காஞ்சிபுரம் மாவட்ட கருவூலத்தில் ஒப்படைக்க வேண்டும்.

முதன்மை கண்காணிப்பாளர் தங்கள் தேர்வு கூடங்களில் தேர்வு எழுதும் தேர்வர்கள் தேர்வு அறைக்கு செல்ல ஏதுவாக தேர்வு எழுதுபவர்களின் நுழைவு சீட்டு எண்களையும், அதற்குரிய தேர்வு எழுதும் அறை எண்களையும் தேர்வு மையத்தின் நுழை வாயிலில் குறிப்பிட வேண்டும்.

தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் சார்பில் தேர்வு எழுதுபவர்களுக்கு ஏதுவாக அனைத்து தேர்வு மையங்கள் சென்று தேர்வு எழுதிவிட்டு வர தேவையான பேருந்து வசதிகள் செய்து தர வேண்டும்.

மின்வாரியம் சார்பில் தேர்வு எழுதும் மையங்களில் காலை 8 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை மின்வெட்டு இன்றி தேர்வு நடைபெற தேவையான ஏற்பாடுகள் செய்து தர வேண்டும்.

தீயணைப்பு துறை சார்பில் தீயணைப்பு கருவிகளுடன் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்து தர வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அருவலர் திரு.க.சௌரிராஜன், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய பிரிவு அலுவலர்கள் மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியிடுபவர்**

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
காஞ்சிபுரம்